**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 474 of 2025

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு. பிரேம் ஆனந்த்

Father's Name : த/பெ.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of May** 2026.

**(2,4,5 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது சூலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு ஆவணங்களில் அடிப்படையில் நான் இவ்வழக்கில் சாட்சி அளிக்கிறேன். கடந்த 11.11.2015 ஆம் வருடம் சிறப்பு உதவி ஆய்வாளர் குமரேசன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த பொழுது நவீன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண் 782/2015 சட்டப்பிரிவுகள் 147,294(b), 506 (ii) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 8:45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகேஸ்வரி மற்றும் தங்கவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ**.2 ஆக குறியீடு செயல்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ**.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் நவீன், மகேஸ்வரி, மஞ்சுளா மகேஸ்வரி, தங்கவேல் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளான மனோஜ் குமார், திலீப் குமார், மனோஜ் குமார் ஆகியோர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். எதிரிகள் அருண்குமார் மற்றும் சிலம்பரசன் ஆகியோர்கள் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றுள்ளார்கள். வழக்கின் புலன்விசாரணை அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 147,294(b), 506 (ii) இதச விலிருந்து 147,294(b) இதச வின் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ**.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து ஒன்று முதல் ஐந்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் சொன்னது போல் புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**(Sd/-T.Arunkumar)**
**Judicial Magistrate**
**Sulur.**